**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 28.10.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

8ஆவது ஊதியக் குழுவிற்கான **ஆய்வுப் பட்டியல்** விவரங்களை, மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று முதல், தமிழகத்தில் **3 நாள் பயணம்** மேற்கொண்டுள்ளார்.

சம வாய்ப்பு வழங்கப்பட்டால், கற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், **எதையும் கற்று சிறக்க முடியும்** என்று புதுச்சேரி துணை நிழை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், **மோன்தா புயல்** நிலவரங்களை எதிர்கொள்ள, அரசு இயந்திரம், முழுமையாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

----------------------------

*அமைச்சரவை (13)*

8ஆவது ஊதியக் குழுவிற்கான **ஆய்வுப் பட்டியல்** விவரங்களை, மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். 8ஆவது சம்பளக் கமிஷன், அமைக்கப்பட்ட நாளில் இருந்து, 18 மாதங்களுக்குள் அரசிடம் அறிக்கை கொடுக்கும் என்றும், சம்பளக் கமிஷனில், தலைவர், ஒரு பகுதி நேர உறுப்பினர், ஒரு உறுப்பினர்-செயலர் ஆகியோர் இடம்பெறுவார்கள் என்றும் அவர் கூறினார். நடப்பாண்டு ராபி பருவத்தில், பாஸ்பேட், மற்றும், பொட்டாஷ் உரங்களுக்கு, நுண்னூட்டச் சத்து அடிப்படையிலான மானிய விகிதங்களுக்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. உரங்கள்

மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் சர்வதேச விலை நிலவரங்களுக்கு ஏற்ப, மானிய விகிதங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

----------------------------

*ஜிஎஸ்டி பஞ்சாப்* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், பஞ்சாப்பில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறுகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி பஞ்சாப் 2* (16)

**(வாய்ஸ்)**

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், பல்வேறு துறைகளுக்கு வரிக் குறைப்பு வழங்கப் பட்டுள்ளதால், குறிப்பாக, பஞ்சாப்பில், பொருளாதாரம் வெகுவாக ஊக்கம் பெற்றுள்ளது. புதிய வரிக் கட்டமைப்பில், பால், பால் பொருட்கள், உணவுப் பண்டங்கள், மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், பஞ்சாப்பில் இத்தகைய பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கவும், இத்துறைகள் சார்ந்த, பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும் வழி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, லூதியானா மற்றும் அம்ரித்சர் பகுதிகளில், பாலைக் கொண்டு தயாரிக்கப்படும் இனிப்புப் பண்டங்களின் விலை, 5 முதல் 7 சதவிகிதம் குறைந்து இருப்பதால், நுகர்வோரும், சிறு உற்பத்தியாளர்களும் ஊக்கம் பெற்றுள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான மக்களின் வரிச் சுமைக் குறையவும், சந்தையில் போட்டித் திறன் அதிகரித்து, வேலை வாய்ப்புகள் பெருகவும், பஞ்சாப் உள்ளிட்ட எல்லா மாநிலங்களிலும், வாய்ப்பு ஏற்பட்டு இருப்பதில் ஐயமில்லை.

-----------------------------

*சி.பி. ராதாகிருஷ்ணன்* 1 (18)

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். கோவை மக்கள் பேரவை சார்பில், கொடிசியா வளாகத்தில் இன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் அவர் பேசுகையில், நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்வது, தொழிலாளர்கள், மற்றும், விவசாயிகள்தான் என்றார். நவீனமயத்தினால், தொழில்துறை வளருமே தவிர, தொழிலாளர்களுக்கு தேவை இல்லாமல் போகாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் கூறினார். முன்னதாக, செஷேல்ஸ் அதிபரின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர், அந்நாட்டில் இருந்து இன்று காலை, கோவை விமானத்தில் வந்திறங்கிய குடியரசுத் துணைத் தலைவருக்கு, மாநில அரசுப் பிரதிநிதிகள், தொழில்துறைத் தலைவர்கள் உட்பட பலர், அன்பான வரவேற்பு அளித்தனர்.

குடியரசுத் துணைத் தலைவராக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக, 3 நாள் பயணமாக இன்று தமிழகம் வந்துள்ள திரு. சி.பி ராதாகிருஷ்ணன், திருப்பூர், மதுரை, மற்றும், ராமநாதபுரத்திலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இன்று அவர், கோவையில், பேரூர் மடத்திற்கு செல்வதுடன், சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களிலும் பங்கேற்கிறார். இன்று மாலை அவர்

*சி.பி. ராதாகிருஷ்ணன்* 2 (5)

திருப்பூர் சென்று, நாளை திருப்பூரில், பாராட்டு விழாவில் கலந்து கொள்கிறார். நாளை மாலை அவர் மதுரை சென்று, மீனாட்சி அம்மன் கோவிலில் வழிபாடு செய்கிறார். வரும் வியாழக் கிழமை, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழாவிலும் குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொள்வார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

கைலாஷ்நாதன் (16)

கல்வி என்பது ஒவ்வொரு குழந்தையின் உரிமை என்பதால், கற்றல் குறைபாடு கொண்ட குழந்தைகளை புறந்தள்ளாமல், அவர்களையும் சமூகத்தில் ஒருங்கிணைத்துக் கொள்ள, மக்களிடையே விழிப்புணர்வு அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார். **கற்றல் குறைபாட்டை புரிந்து கொள்ளுதல்** என்ற தலைப்பில், ரெட்டியார்பாளையம் **பிரிட்ஜஸ் வித்யாலயா பள்ளியில்** இன்று நடைபெற்ற, **தொடர் மறுவாழ்வுக் கல்வி** நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், கற்றல் குறைபாடு என்றால், **புத்தியின்மை எனப் பொருள் அல்ல** என்றும், சம வாய்ப்பு வழங்கப்பட்டால், இத்தகைய குழந்தைகளும், எதையும் கற்று சிறக்க முடியும் என்றும் கூறினார். கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்கு கற்றுக் கொடுக்க, மேலும் பல ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்றும், இதில் நவீன தொழில்நுட்பங்களை அதிகம் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும், துணை நிலை ஆளுநர் கூறினார். பல்வகை குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய நிறுவனமும், **புதுச்சேரி ஆட்டிசம் நலச் சங்கம்**, மற்றும், **கற்றல் குறைபாட்டாளர் சங்கமும்** இணைந்து, இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து இருந்தன.

**----------------------------**

*புயல் 1 (15)*

வங்கக் கடலில் உருவான மோன்தா புயல், இன்று அதிகாலை தீவிரப் புயலாக வலுப்பெற்ற நிலையில், தீவிரப் புயல் இன்று மாலை அல்லது இரவு வாக்கில் மசூலிப்பட்டினம்-கலிங்கப்பட்டினம் இடையில், காக்கிநாடா அருகே, ஆந்திரக் கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. புயல் கரையை கடக்கும் போது, அதிகபட்சம் மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்தக் காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடக்கு-வடமேற்கு திசையில், மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வரும் புயல், இன்று பிற்பகல் நிலவரப்படி, காக்கிநாடாவிற்கு தெற்கு-தென்கிழக்கே 150 கிலோ மீட்டர் தொலைவிலும், மசூலிப்பட்டினத்திற்கு தெற்கு-தென்கிழக்கே, 70 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டு இருந்தது. புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசாவிலும், ஆந்திரத்தை ஒட்டி

உள்ள புதுச்சேரியின் ஏனாம் பகுதியிலும், சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும், முற்றிலும் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளன. ஏனாமில், புயல் நிலவரங்கள் குறித்து கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

*புயல் 2 (18)*

(வாய்ஸ்)

மோன்தா புயல் காரணமாக ஏனாமில், இன்று மதியத்தில் இருந்தே, சுமார் 70 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசி வருவதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார். 15க்கும் மேற்பட்ட இடங்களில் பலத்த காற்றால், சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றும் பணிகளில், தீயணைப்பு, மின்சாரம் உள்ளிட்ட துறைகளின் அவசரகால ஊழியர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். மண்டல நிர்வாக அதிகாரி திரு. அன்கித் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லபள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் ஆகியோர், இன்று ஏனாமில் பலவேறு இடங்களுக்கு நேரில் சென்று, நிலவரங்களை பார்வையிட்டனர். கடலோர கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களை இவர்கள் சந்தித்து, புயல் பாதுகாப்பு மையங்களுக்கு செல்லுமாறு கேட்டுக் கொண்டனர். ஏனாமில், திட்டமிடப்பட்டு 18 புயல் பாதுகாப்பு மையங்களில், 10 மையங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டு, மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் வழங்கப் பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாரா-வை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஏனாம் புயல் நிலவரங்களை கேட்டறிந்தார். புதுச்சேரியில் இருந்து, மாநில அரசின் நிதி மற்றும் வருவாய் துறைச் செயலர் திரு. **கிருஷ்ணமோகன்** உப்பு, இன்று மதியம் ஏனாமிற்கு புறப்பட்டுள்ளார். தமிழகத்தில் இருந்து, 15 பேர் அடங்கிய **மாநில பேரிடர் மேலாண்மை படைக்குழு** ஒன்றும் ஏனாமிற்கு புறப்பட்டுள்ளது.

*புயல்* 3 (7)

தமிழகத்தில் இன்று, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, தேனி, தென்காசி, மற்றும் குமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும், கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில், மிக

கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது.

-----------------------------

*சோனோவால் (16)*

குஜராத் மாநிலம் லோத்தால் நகரில் அமைய உள்ள, **தேசிய கடல்சார் மரபுகள் வளாகத்தின்** சின்னத்தை, மத்திய கப்பல் மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இன்று வெளியிட்டார். மும்பையில் நடைபெறும் **இந்திய கடல்சார் வார விழாவின் 2ஆம்** நாள் நிகழ்வுகளில், இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. பல்லாயிரம் ஆண்டுப் பழமையான இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம், இந்தியாவின் கதையாக மட்டுமின்றி, கண்டங்களுக்கு இடையிலான பரஸ்பர கூட்டாண்மை, மற்றும் மரியாதையின் அடையாளமாகவும் திகழ்வதாக, நிகழ்ச்சியில் பேசுகையில் அமைச்சர் கூறினார். லோத்தாலில் அமைய உள்ள **சர்வதேச கடல்சார் மரபுகள் வளாகம்**, பன்னாட்டுப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலாக் கேந்திரமாகவும், கடல்சார் துறையில், புதுமைப் படைப்புகளை உருவாக்க, இளைஞர்களை தூண்டுவதாகவும் அமையும் என அவர் தெரிவித்தார். இவ்விழாவின் போது, கடல்சார் துறையில் ஒத்துழைப்பு குறித்து, இந்தியாவிற்கும், நெதர்லாந்திற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. நெதர்லாந்து அமைச்சர் திரு. ராபர்ட் **டைமேன்** உள்ளிட்டோர கலந்து கொண்டனர்.

-----------------------------

*சோலார்* (17)

சோலார் மின் உற்பத்தியில், உலகின் 3ஆவது பெரிய நாடாக இந்தியா மேம்பட்டு உள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், **சர்வதேச சோலார் கூட்டணிப் பேரவையின்** 8ஆவது அமர்வு குறித்து செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான இந்தியாவின் மின்சார உற்பத்தித் திறனில், சோலார் மின் உற்பத்தித் திறனின் பங்கு, 50 சதவிகிதத்தை தாண்டி, அதிகரித்து இருப்பதாக

தெரிவித்தார். தற்போது இந்தியாவின் புதைபடிவ எரிபொருள் இறக்குமதியும், மாசுபாட்டினால் ஏற்படும் செலவுகளும் குறைந்து, தூய எரிபொருளின் பொருளாதாரப் பலன்கள், வெளிப்பட்டு வருவதாக, அமைச்சர் கூறினார். உலகின் மொத்த சோலார் மின் உற்பத்தித் திறனில், சர்வதேச சோலார் கூட்டமைப்பு நாடுகள், 41 சதவிகிதம் பங்களிப்பதாகவும், கூட்டணியின் முக்கிய தாக்கங்களுக்கு, இதுவே சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார். செலவு குறைந்த, அனைவருக்கும் ஏற்ற, நீடித்த எரிசக்தி ஆதாரமாக, சூரிய சக்தியை மாற்ற, சர்வதேச சோலார் கூட்டணி, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக, திரு. பிரல்ஹாத் ஜோஷி மேலும கூறினார்.

----------------------------

*நிதி ஆயோக்* (14)

சேவைத் துறையின் தலைமையிலான வளர்ச்சியில், அடுத்த அலையை தொடக்குவதில், மாநில அரசுகள், மற்றும் தொழில் துறையினருக்கு தேவையான உத்திகளை வழங்கும் வகையில், சேவைத் துறை பற்றிய 2 அறிக்கைகளை, நிதி ஆயோக் இன்று வெளியிட்டுள்ளது. சேவைத் துறையின் பல்வேறு பிரிவுகள், தேசிய, மற்றும், மாநில நிலையில் பொருளாதாரத்திற்கு வழங்கும் பங்களிப்பு குறித்தும், சேவைத் துறையால் வழங்கப்படும் வேலை வாய்ப்புகளில், இத்துறையின் பல்வேறு பிரிவுகள், பிராந்தியங்கள், கல்வி, மற்றும், பாலின அடிப்படையில் காணப்படும் வேறுபாடுகள் குறித்தும், இந்த அறிக்கைகளில் விவரிக்கப் பட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் சேவைத் துறையின் பங்களிப்பு, முக்கியமானதாக உள்ள நிலையிலும், கொள்கை வட்டாரங்களில் இத்துறைக்கு கிடைக்கும் அங்கீகாரம், குறைவாகவே நீடிப்பதாக, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. பி.வி.ஆர். சுப்ரமணியம், நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

----------------------------

*வைஷ்ணவ்* (10)

இந்தியாவின் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி கடந்த மாதம், 1.8 பில்லியன் டாலர் என்னும் சாதனை அளவை எட்டி இருப்பதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ்

தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தேசிய நாளேடு ஒன்றில் வெளியாகி உள்ள கட்டுரையை, அவர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, இந்தியாவின் ஏற்றுமதிப் பட்டியலில், மின்னணு பொருட்கள் தற்போது, 3ஆவது இடத்திற்கு உயர்ந்து இருப்பதாக தெரிவித்துள்ளார். மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி, நாட்டில் வலுவாக வேரூன்றி வருவதால், இத்துறையில், ஆயிரக்கணக்கிலான புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

8ஆவது ஊதியக் குழுவிற்கான **ஆய்வுப் பட்டியல்** விவரங்களை, மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று முதல், தமிழகத்தில் **3 நாள் பயணம்** மேற்கொண்டுள்ளார்.

சம வாய்ப்பு வழங்கப்பட்டால், கற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், **எதையும் கற்று சிறக்க முடியும்** என்று புதுச்சேரி துணை நிழை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், **மோன்தா புயல்** நிலவரங்களை எதிர்கொள்ள, அரசு இயந்திரம், முழுமையாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**